# ஐக்கியம் - தமிழர் பலம்

www.tamilarangam.net

## மட்டக்களப்பு மாவட்டம் வாழ் தமிழ் பேசும் மக்களே !

சிறுகச் சிறுக அழிக்கப்பட்டு வருகிறது கிழக்குத் தமிழ் மண். எமது முன்னோர் கோலோச்சிய மட்டக்களப்புப் பிரதேசத்தில், இன்று நாம் வக்கற்றவர்களாகிப் போய்க்கொண்டிருக்கிறோம். திட்டமிட்ட வகையில் நாம் எமது அன்னை பூமியிலேயே சிறுபான்மையினராக்கப்பட்டு வருகிறோம். எமது பொருளாதாரம் நசுக்கப்படுகிறது. நெற்கதிரும், பாலும், தேனும் கொழித்த மட்டக்களப்பு மாவட்டம் இன்று செந்தமிழ் நாடா ? இல்லை பேரினவாதத்தின் வேட்டைக் காடா ? எனக் கேட்குமளவிற்கு நிலைதடுமாறிக் கிடக்கிறது. வீழ்ந்து கிடக்கும் எம் மண்ணின் விடிவிற்கு வழிதான் என்ன? *அதுதான் தமிழரின் அரசியல் ஐக்கியம்.*

நீங்கள் வேண்டுவதும் நாம் அவாவுறுவதும் அதுவே. நம் இன பலத்தை வீழ்த்திடவும் குடியேற்றவாசிகளையெல்லாம் இங்கு பெரும்பான்மையினராய் மாற்றிடவும் எம் இன எதிரிகள் பயன்படுத்தும் பிரதான ஆயுதம் - பிரித்தாளும் சூழ்ச்சி. பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழர் பிரதிநிதிகளுக்கிடையே காணப்பட்ட ஐக்கியமின்மையை அரசு பயன்படுத்தி தன் பிரித்தாளும் சூழ்ச்சியை எம்மீது கட்டவிழ்த்து விட்டது அண்மைக் கால அனுபவம். இது எமக்கு ஒரு பாடம்.

இந்த ஆபத்தான சூழ்நிலையில் தமிழரின் ஒருமித்த பலத்தைக் கூறுபோட்டு, என் பங்கு உன் பங்கு என எடுத்திட முண்டியடிக்கின்றனர் சிலர். இதைத் தடுப்பதற்கோ யாரும் இங்கு இலர். இதனால் மட்டக்களப்பில் வெல்லப் போவதோ பிறர்.

ஐக்கியம்! ஐக்கியம்! என நாமெல்லாம் வேண்டிநிற்கும் இவ் வேளையிலே மீண்டும் எம்மிடையில் வருகிறது கூட்டணி. வந்தாரை வரவேற்பது இம்மண்ணின் சிறப்பு. அதனால் வருக என்கிறோம். ஆனால் அதே மூச்சில் மட்டக்களப்புத் தமிழரின் ஒன்றுபட்ட அரசியல் பலத்தை பங்கு போடும் உம் எண்ணத்தை கைவிடுக என்கிறோம்.

*ஐக்கியம்- பலம்.* கிழக்கின் நிலமையோ *பலவீனம்.*

இது கூடவா புரியவில்லை கூட்டணியினருக்கு?

தனியாகவே அரசியல் செய்வோம் மட்டக்களப்பில் என்கின்றனர் அவர்கள்.

இதற்கு அவர்கள் கூறும் காரணம் - ஆயுதமேந்தியவர்களுடன் சேர்ந்தால் தமக்கு மாசு உண்டாகுமாம். தாங்கள் உண்மையான ஜனநாயகவாதிகள் ஆதலால் ஆயுதத்தைத் தொட்டவர்களுடன் ஐக்கியப்படுவது ஜனநாயகத்திற்கு இழுக்காகுமாம். சிறு குழந்தைக்கும் புரியும் இந்தக் கூற்றில் பொதிந்திருக்கும் கபடத்தனம்.

இனிச் சிங்களத் தலைமைகளுடன் பேசிப் பயனில்லை. தமிழீழம்தான் தமிழர்களின் விடிவிற்கு ஒரே வழியென அன்று ஆற அமர இருந்து சிந்தித்து முடிவெடுத்தது யார்?

வட்டுக்கோட்டை மாநாட்டில் அதைப் பிரகடனப்படுத்தியது யார்?

எமக்கு அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் தமிழீழத்தை அமைத்திட நீங்கள் தந்திடும் ஆணை எனப்பேசி 77 தேர்தலில் தனித் தமிழ் நாட்டினைப் போராடிப் பெற்றிட தமிழரது ஏகோபித்த ஆதரவைப் பெற்றுக் கொண்டது யார்?

சாத்வீகத்தை மறுத்து ஆயுதத்தின் மீது நம்பிக்கை வைத்துப் போராடிச் சிறை சென்ற குட்டிமணியை பாராளுமன்றப் பிரதிநிதியாக நியமனம் செய்தது யார்?

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

தமிழீழம் கோரி வெடித்ததுதான் எமது இளைஞர்களின் தீரமிக்க ஆயுதப் போராட்டம்.

www.tamilarangam.net

கூட்டணியினர் நாடகமாடுகின்றார்களா? அல்லது மறந்துதான் போய்விட்டார்களா? கூட்டணி தமது நாற்காலி ஆசைகளுக்காக தமிழின விடுதலைக்கு தம் இன்னுயிரை ஈந்த வீர இளைஞர்களின் தியாகத்தைக் கொச்சைப்படுத்தாதிருக்கட்டும். அவர்களை விடுதலைப் போருக்கு அர்ப்பணித்து இன்று கண்ணீரிலும் வறுமையிலும் வாடும் அன்னையரையும் தந்தையரையும் இழிவு படுத்தாதிருக்கட்டும்.

கூட்டணியின் தலைமை இந்தியாவில் பாதுகாப்பாக இருந்தபோது அவர்கள் பட்ட துயர் அறிந்திருக்க வாய்ப்பில்லை என்று நாம் அறிவோமாயினும், கூட்டணியினரின் மனச்சாட்சிதான் எங்கே போய்விட்டது என்று கேட்கிறோம்.

கூட்டணியினர் இன்று தமிழின விடுதலைக்காக ஆயுதம் ஏந்தியவர்களின் உன்னதமான தியாகங்களைக் கொச்சைப்படுத்துவதானது, வட்டுக்கோட்டை மாநாட்டுத் தீர்மானத்தையும் அம் மாநாட்டை முன்னின்று நடத்திய தந்தை செல்வாவையும் கொச்சைப்படுத்தும் வேலையல்லவா?

உயிர் தமிழுக்கு உடல் தமிழ் மண்ணுக்கு எனப் போராடித் தம் இன்னுயிர் நீத்தோரின் அர்ப்பணிப்பின் மேல் ஏறி நின்றுதான் ஆயுதம் ஏந்தியோருடன் எமக்கு பேச்சில்லை , ஐக்கியமும் இல்லை என மட்டக்களப்பு மக்களுக்கு இவர்கள் கூறப் போகின்றார்கள் என்பதை மறந்து விடாதீர்கள்.

மட்டக்களப்பில் தமிழரின் ஒன்றுபட்ட அரசியல் பலத்தை கூட்டணியினர் சிதைப்பது இது முதல் தடவையல்ல. 1977 பாராளுமன்றத் தேர்தலில் கட்சியின் மூத்த உறுப்பினர் இராசதுரைக்கு எதிராக காசி ஆனந்தனை ஏவிவிட்டு மட்டக்களப்புத் தமிழரின் அரசியல் ஐக்கியத்தைத் துண்டாடியதை இங்கு யாரும் மறந்து விடவில்லை.

இந்தியத் தூதுவர் தீக்சித் சொன்னார் என்ற ஒரே காரணத்துக்காக இந்திய இராணுவத்தின் கட்டுப்பாட்டில் நடந்த 1989 தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எவ்., ஈ.என்.டி.எல்.எவ் , ரெலோ ஆகியோருடன் கூட்டு வைத்த போது அவர்களது கையில் இருந்த ஆயுதங்கள் கூட்டணியினரின் கண்களுக்குத் தெரியவில்லையா? இன்று மட்டும் ஏன் ஐக்கியம் எனில் கசக்கிறது இவர்களுக்கு?

தம் தலைவர்கள் இந்தியாவிலும், ஐரோப்பாவிலும் இருந்து வந்த காலங்களில் வடக்கிலும் கிழக்கிலும் ஆயுதமேந்திய இளைஞருக்கு உறுதுணையாக நின்ற பல கூட்டணித் தொண்டர்களின் உண்மையான அவா ஐக்கியமே. இதை நாம் நன்கு அறிவோம். அறியுமா மீண்டும் எம்மத்தியில் வரும் கூட்டணித் தலைமை?

தனித்தனியே நாம் தமிழ் மக்கள் மத்தியில் செயல்படுவது தமிழ் இனத்திற்கும் பலவீனம், அத்துடன் நம் எல்லோருக்குமே பலவீனம். இதை யாவரும் - கூட்டணி உட்பட உணரவேண்டும் என்பதே எம்பேரவா.

நாமும் இந்த மண்ணின் மைந்தர் என்ற உரிமை உணர்வில் இதைக் கூறுகின்றோம்.

கடந்த காலங்களில் நாம் விட்ட தவறுகளை பாடமாக ஏற்று, பலவீனமடைந்து வரும் தமிழரின் அரசியல் பலத்தை மீண்டும் வீரியம் பெற்றிடச் செய்வோம். ஐக்கியப்படுவோம் அதற்காக.

தமிழர் வாழ்வை வளப்படுத்துக! பலப்படுத்துக! எனக் கூட்டணியையும் ஏனைய தமிழ் அமைப்புகளையும் மட்டக்களப்பு மக்களின் சார்பாக அன்புடன் அழைக்கின்றோம்.

---

இப்பிரசுரம் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (PLOTE) அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் மட்டக்களப்பு மாவட்டக் கிளையின் சார்பில் மாவட்ட அமைப்பாளர் க.பாலகிருஷ்ணனால் 04-06-94 இல் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்